மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தற்போது முன்மொழிந்த சட்ட முன்வடிவையும் சேர்த்து எடுப்பதற்கான தீர்மானத்தை மொழியக் கேட்டுக் கொள்கிறேன். அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 1994 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1994) இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 5 உள் இனம் 4-க்குப் பிறகு இன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.